அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். இருந்த போதிலும்: நம்முடைய திட்டங்கள் விரைவிலே செயல்படுவதற்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே, இதிலே அமைச்சர் அவர்கள் தலையிட்டு, உடனடியாக ஆங்காங்கே தொழிற்சாலைகள் கட்டுவதற்கு வழிவகைகள் செய்வார்களா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, அரசு நிச்சயமாக செய்யும்,

கீழ்மாறாமலையிலுள்ள அரசு கிராம்புத் தோட்டம்.

*வினா எண் 305—திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி அற நிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் கீழ்மாறாமலையிலிருக்கும் அரசுக்கு சொந்தமாக உள்ள கிராம்புத் தோட்டத்தில் பெண் தொழிலாளர்களுக்கு வேலை மறுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) அது சம்பந்தமான புகார்கள் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) அதன் மீது எடுத்த நடவடிக்கையென்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: : (அ) இல்லை ; பொதுவாக மண்வெட்டுதல் போன்ற கடுமையான வேலைகளுக்கு ஆண் ஆட்களும், தண்ணீர் ஊற்றுவது போன்ற மென்மையான வேலைகளுக்கு பெண் ஆட்களும் அமர்த்தப்படுவது வழக்கம்.

(ஆ) புகார்கள் ஏதும் வரவில்லை.

(இ) இவ் வினாவுக்கு இடமில்லை.

[முற்பகல் 9.30]

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இந்தக் கேள்வி ஏற்கனவே 6 மாதங்களுக்கு முன்னால், கடந்த சட்ட மன்றக் கூட்டத்தின்போது கொடுக்கப்பட்டது. அப்போது அங்கே பெண் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத காரணத்தினால், சத்தியாகிரகப் போராட்டம் நடந்தது. என்னுடைய இப்போதைய கேள்வி, இப்போது அங்கே பெண்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்களா? கொடுமையான வெய்யில் காலத்தின் போது கிராம்புக்கு தண்ணீர் ஊற்றினால்தான் பாதுகாக்க முடியும். அந்த அடிப்படையில் அங்கே இப்போது

1981 பிப்ரவரி 28]

பெண் தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்களா? ஏற்கனவே, இந்த கிராம்புத் தோட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் எத்தனை பெண் தொழிலாளர்கள் இருந்தார்களோ அவர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு கொடுக்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர்.எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பொதுவாக பெண் தொழிலாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் கோடை காலத்தில் 5 மாதங்களுக்கு தண்ணீர் ஊற்றும் வேலை கொடுக்கப்பட்டு வருகிறது. சென்ற 80, ஜனவரி முதல் மே மாதம் முடிய 120 பெண்களுக்கு தினமும் தண்ணீர் ஊற்றும் வேலை கொடுக்கப்பட்டது. அந்த வேலை முடிந்து விட்டதால், தற்போது தேவையான பெண்களுக்கு வேலையின் அளவுக்கு ஏற்ற வகையில் வேலைகள் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் விடும் வேலை மட்டுமல்லாமல், ஏற்கனவே கிராம்புத் தோட்டங் களின் இடையே பயங்கரமான முட் புதர்கள், செடிகள் முளைப்ப தால், அவைகளை களை எடுப்பதற்காக பெண் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆகவே, 5 மாதம் வேலை என்பது மட்டுமல்லாமல், 10 மாதங்களுக்கு வேலை செய்வதற் கான வாய்ப்பும் இருக்கிறது, எனவே, களை எடுப்பதற்கு பெண் தொழிலாளர்களை அமர்த்தி, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக்களை எடுப்பதற்கான வேலை முதலிலே கத்தி யால் வெட்டப்பட்டு வந்தது. அப்போது அந்தப் பணிக்கு பெண் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டார்கள், ஆனால், கத்தியால் வெட்டுவதால் பயிர்களுக்கு பலன் ஏற்படவில்லை என்பது தெரிந்த பிறகு, வேரோடு எடுப்பது என்பது இப்போது அமுலில் இருந்து வருகிறது. வேருடன் எடுப்பதற்கு மண் வெட்டி போன்றவைகளை உபயோகிக்க வேண்டியிருப்பதால், அந்த வேலைக்கு பெண்கள் பயனபடுத்தப்படுவதில்லை. ஆண்கள் பயன் படுத்தப்பட்டு வருகிறார்கள். ஆகவே, பெண்களுக்கு உரிய வேலை இருக்கிறபோது, பெண்கள் அமர்த்தப்படுகிறார்கள் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஈகுவல் ரெமுனரேஷன் ஆக்ட் வந்த பிறகு பெண் தொழிலாளர்களுக்கு பிரசவ காலத்தில் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதற்குப் பிறகு, வன இலாகா அதிகாரிகள் தோட் டங்களிலே பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தவிர்த்து, ஆண்களை வேலைக்கு அமர்த்தி வருகிறார்கள். ஆகவே பெண் தொழிலாளர்களை எந்த அளவுக்கு அமர்த்த வேண்டுமோ,

அந்த அளவுக்கு அமர்த்தி, அவர்கள் வேலைகளை நிரந்தரமாக்கு வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற கேள்வி கிராம்புத் தோட்டத்தில் பெண் தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகின்றார்களா என்பது. அதைப் பற்றிய தகவல் என்னிடத்திலே இருக்கிறது; பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். பொதுவாக, தோட்டங்களில் பெண் தொழிலாளர்களுக்கு எந்த அளவுக்கு வேலை அளிக்கப்படுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், தனியாக கேள்வி எழுப்பினால், விவரமான தகவல்களைச் சேகரித்துத் தர முடியும்.

கொடைரோடில் சுற்றுலா மாளிகை.

வினா எண் 306—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம் கொடைக்கானலுக்கு அதிகமாக வெளிநாட்டுக்காரர்கள் வருகின்ற காரணத்தால் கொடைரோடு ரயில்வே ஸ்டேஷனை ஒட்டி சுற்றுலா மாளிகை ஏற்படுத்த அரசிற்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால் எப்போது அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:

(அ) மற்றும் (ஆ). தற்சமயம் இல்லை

திருமதி. ஏ. எஸ் பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, அயல் நாடுகளிலே இருந்து வரக்கூடியவர்கள், ரயிலை விட்டு இறங்கியதும், குடிப்பதற்கு தண்ணீர் இல்லை; காபி அருந்துவதற்கும் முடியவில்லை. 2 மணி நேரம் களைப்பாறுவதற்கு வாய்ப்பும் இல்லை என்ற காரணத்தினால், தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது இல்லையென்றாலும் மீண்டும் இதை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, ரயில்வே ஸ்டேஷனுக்கும், டி. பி.-க்கும் எதிரே சிறிய அழகான மலை ஒன்றிருக்கிறது, அது புறம்போக்கு நிலம், அதிலே ஒரு ஏக்கர் நிலத்திலே சுற்றுலா மாளிகை அமைத்து, வரக்கூடியவர்களுக்கு நல்ல வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS